

வாலிபர் பகுதி

# ஒரு யூத விஞ்ஞானியின் மிக சிறந்த கண்டுபிடிப்பு

சகோதரி. பிரேமாடேவிட்

கிறிஸ்துவில் அன்பான வாலிபத்தம்பி, தங்கைகளே! DR.ஜேம்ஸ் டூர் என்ற யூதர் அமெரிக்காவிலுள்ள நியூயார்க்கில் பிறந்து வளர்ந்தார். ஆர்கானிக் கெமிஸ்ட்ரியல் படிப்பில் PH.D பட்டம் பெற்று, உலகளவில் மிகச் சிறந்த அறிவாளிகள் 50 பேர்களில் ஒருவராக, பெரிய பல்கலைக்கழகங்களில் பேருரையாற்றும் மிகச் சிறந்த அறிஞராகவும் இருந்தார். இதுவரை 650 புத்தகங்களை எழுதியுள்ளார். மருத்துவம், எலக்ட்ரானிக் கம்ப்யூட்டர், நினைவாற்றல் போன்ற பிரிவில் அநேக கண்டுபிடிப்புகளை உருவாக்கி சாதனை படைத்துள்ளார்.

## மறுபடி பிறத்தல் என்றால் என்ன?

யூதரான இவருக்கு இயேசு வரப்போகிற மேசியா என்று மட்டும் தான் தெரியும். அவரைப் பற்றி மேலும் தெரிந்து கொள்ள நாட்டமில்லாத வாலிபனாக கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த போது சகமாணவர்களில் சிலர் தங்களை 'மறுபடி பிறந்த கிறிஸ்தவர்கள்' (BORN AGAIN CHRISTIANS) என்று சொல்லிக் கொள்வதில் பெருமிதப்பட்டனர். இவருக்கோ இது என்ன? புரியாத புதிராக இருக்கே என்று யூத ரபியிடம் சென்று விளக்கம் கேட்டதற்கு, இவரைக் கண்டித்து வெளியே அனுப்பிவிட்டார். அது இவருக்கு துக்கமாக இருந்தது. அந்த சமயத்தில் தான் இவர் முன்பு சந்தித்த மாணவனில் ஒருவனை சந்தித்தார். அப்போது அந்த மாணவன் ஒரு படத்தை வரைந்து இவருக்கு விளக்கம் கூறினான். உயர்ந்த செங்குத்தான பாறையின் உச்சியின் ஒரு பகுதியில் ஒரு மனிதன் நின்று கொண்டிருப்பது போலவும், மற்றொரு பாறையில் ஆண்டவர் நின்று கொண்டிருப்பது போலவும் வரைந்தான். இரண்டு பாறைகளுக்கு இடையே ஒரு பெரும் இடைவெளியும், அதன் கீழே ஒரு பெரும் ஆழமான பள்ளமும் இருப்பது போலவும் வரைந்து, அந்த இடைவெளிக்கு பாவம் என்று எழுதினான். மனிதனும் ஆண்டவரும் ஒன்று சேர விடாமல் பாவமே தடையாக இருக்கிறது என்று அவன் சொல்ல வருவதை இவர் புரிந்து கொண்டார். ஆனால் நான் ஒரு பாவி அல்ல, யாரையும் கொலை செய்யவில்லை, கொள்ளையடிக்கவில்லை நான் எப்படி பாவியாக இருக்க முடியும் என்று இவர் அவனிடத்தில் கேட்டார்.

## பாவத்தை உணர்த்தும் வல்லமையுள்ள வார்த்தை

யூதர்கள் 'பாவம்' என்பதைப் பற்றி ஜெப ஆலயத்திலும், வீட்டிலும் கூட பேசுவதே இல்லை. 'எல்லாரும் பாவம் செய்து தேவமகிமையற்றவர் களானார்கள்', ரோமர் 3:23, நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரம் செய்தாயிற்று மத் 5:28. இதை கேட்ட மாத்திரத்தில் அவரது நெஞ்சில் யாரோ பலமாக குத்தியத்தைப் போன்ற வேதனையை உணர்ந்தார். ஏனென்றால் கல்லூரியில் யாருக்கும் தெரியாமல் ஆபாச படங்கள் (PORNOGRAPHY) அடங்கிய புத்தகங்கள், மாதந்திர பத்திரிகைகளை தவறாமல் வாங்கி படிப்பது இவரது பழக்கமாயிருந்தது. 2000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த ஒருவர் சொன்ன காரியம் வேதத்தில் எழுதப்பட்டு, அதை நான் கேட்ட உடனே என்னை உணர்த்தி, எனது கெட்டப் பழக்கத்திலிருந்து வெளியே வர, என்னை குத்துகிறது என்றால் அது எவ்வளவு வல்லமையுள்ள வார்த்தை 'நான் பாவி' என்பதை உணர்த்திய இயேசுவே என் பாவத்திற்காகப்

பலியானவர். ஏசாயா 53-ம் அதிகாரத்தில் வாசிக்கிறபடி என்னுடைய பாடுகளை, துக்கங்களை சுமந்தவர். எனக்காக இரத்தம் சிந்தி ஜீவனைக் கொடுத்தவர் என்பதைக் கண்டு கொண்டார். இயேசுவை தன் வாழ்க்கையில் கண்டார். பாவ மன்னிப்பை பெற்றார்.

தனது அறைக்குச் சென்று ஆண்டவரே நான் ஒரு பாவி இயேசுவே என் பாவத்தை மன்னியும். எனக்குள் நீர் வாரும் என்று இவர் ஜெபித்து கொண்டிருக்கும் போதே யாரோ ஒருவர் இவர் அறைக்குள் வருவதை உணர்ந்தார். முழங்காலில் நின்று கொண்டிருந்த இவர் கண்ணை திறந்து பார்த்தால் இவரது பாவங்களுக்காக ஜீவன் கொடுத்த இயேசு நின்றிருப்பதை கண்டார். இவருடைய அறையிலே இயேசுவைக் கண்டது இவருக்கு மகிமையாகவும், ஆச்சரியமாகவும் இருந்தது. அவரைக் கண்டதும் அழ ஆரம்பித்தாலும் இனம் புரியாத ஒரு சந்தோஷம். இதை எல்லாரிடமும் சொல்ல வேண்டும் என்ற ஒரு அவசர உணர்வு ஏற்பட்டது.

தன்னுடைய ஒன்று விட்ட சகோதரிகளிடம் இவர் இயேசுவைக் கண்டது பற்றி சொன்னவுடன், உன்னால் இதை எப்படி ஏற்றுக் கொள்ள முடிகிறது. நாம் யூதர்கள் அல்லவா? என்று கடிந்து கொண்டார்கள். என் பாவம் மன்னிக்கப்பட்டது என்பதில் அவர்கள் சந்தோஷப்படாமல் திட்டுகிறார்களே. அப்படியா னால் நான் பாவத்திலே வாழ்வது அவர்களுக்கு தவறாய் தெரியவில்லையே என்று நினைத்தார். இவருடைய அம்மாவிடம் சொன்னவுடன் என்ன சொல்வதென்று தெரியாமல் அடிக்க ஆரம்பித்து விட்டார்கள். அப்பாவிடம் சொன்னவுடன் அவர் திகைத்துப் போய் பேசவே இல்லை. 30 வயதான வாலிபன் இயேசு, எப்படி நம்முடைய முன்னோர்களாகிய மதத்தலைவர்களை குறை கூறலாம். அவர்களை வெள்ளை அடிக்கப்பட்ட கல்லறை என்று எப்படி கூறலாம். அவரைக் கொன்றதுக்கு, அவர்களை குற்றம் சொல்ல மாட்டேன் என்று சொன்ன இவருடைய அம்மா பழைய ஏற்பாட்டை நன்கு படித்தவர்கள். இப்போது புதிய ஏற்பாட்டையும் படித்துள்ளார்கள். அதன் பின்பு தன் மகனுக்கு போன் செய்தார்கள். 72 வயதான நான் பழைய ஏற்பாட்டையும், புதிய ஏற்பாட்டையும் திரும்பத் திரும்ப படித்தேன். இயேசு கிறிஸ்து தனது ஜீவனையே தியாகமாய் தந்தது என்னைத் தொட்டது. இப்பொழுது நான் இயேசுவை நம்புகிறேன். இயேசுவே தேவனுடைய குமாரன் என்றார்கள். நான் என் வாழ்க்கையில் மிகச் சிறந்த கண்டுபிடிப்பை செய்திருக்கிறேன் என்று நினைத்தேன். ஆனால் அதே அனுபவத்தை என் அம்மாவும் கண்டு கொண்டார்கள் என்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியையும் ஆச்சரியத்தையும் தந்தது என்றார்.

## மதமாற்றமல்ல மனமாற்றமே

நான் பெற்ற இந்த பாவ மன்னிப்பு, இரட்சிப்பின் அனுபவம் மதமாற்றமல்ல மனமாற்றமே என்கிறார் இந்த விஞ்ஞானி. இயேசுவின் சீஷர்கள் எல்லாரும் யூதர்கள் தான். அவர்கள் எல்லோரும் இயேசுவை ஆண்டவராக ஏற்றுக்கொண்டு பாவத்திலிருந்து மனம் திரும்பவே சொன்னார்கள். எதிரியாக இருந்த பவுலும் இந்த அனுபவத்தைப் பெற்ற போது இது புதிய மதம் அல்ல, இது வாழ்விற்கான வழி என்ற சொன்னார். வேதத்தை தொடர்ந்து வாசித்து, தியானித்து, அறிந்த சத்தியத்தை அடக்கி வைக்காமல் எல்லோருக்கும் குறிப்பாக கல்லூரிகளிலும் அறிவித்து வருகிறார். குடும்பமாக இயேசுவுக்காக வாழ்ந்து ஊழியம் செய்கிறார்.

இதை வாசிக்கின்ற நீங்கள் கிறிஸ்தவராக அல்லது கிறிஸ்தவர் அல்லாதவராக இருக்கலாம். ஆனால் உங்கள் தனிப்பட்ட வாழ்க்கையில் 'பாவம்' இருந்தால் அது உங்களை ஆண்டவரை விட்டு பிரித்து வைக்கும். எனவே மிகப் பெரிய விஞ்ஞானி கண்டுபிடித்த கண்டுபிடிப்பைப்போல நீங்களும் இயேசுவே என் பாவத்தை மன்னியும். உங்க இரத்தத்தால் என்னை கழுவும். என் வாழ்க்கையை உம் கையில் கொடுக்கிறேன். உம்மை என் சொந்த இரட்சகராக ஏற்று கொள்ளுகிறேன் என்று சொல்லுங்கள். இந்த நிமிடமே உங்கள் உள்ளத்தில் பாவமன்னிப்பின் நிச்சயமும், சந்தோஷமும் உண்டாகும். அவருடைய இரத்தம் சிந்துதலில்லாமல் பாவமன்னிப்பு இல்லை. உங்கள் பாவத்திற்க்காக மரித்த இயேசு, நீங்கள் நீதிமானாய் வாழ உயிரோடு எழுப்பப்பட்டிருக்கிறார். உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்து தாமே உங்களை இரட்சித்து, ஆசீர்வதித்து வழிநடத்துவராக.